# அறிவுத்திருக்கோயில் ~ லியோ முத்து

மாணவர்களின் அறிவு எனும்
கதவைத் திறக்கும்
சாவி என்ற சாமி நீ!
நீ என்றால் சாய்ராம்
சாய்ராம் என்றால் நீ!
உன்னுள் நுழைந்தாலே
உலகையே மறக்க வைக்கும்
இசையோ நீ!
மழைத்துளி மண்ணில் விழும்போது
எழும் வாசம் போல்
உன்னிலிருந்து எழும் எண்ண அலைகள்
எமை உற்சாகமூட்டுகிறதே!
கனவுக்கு முகவரி கொடுத்த
கலாமின் நண்பனே!
நீ கல்வி எனும் ஏவுகணை ஏவி
கலாமின் அன்பைப் பெற்றதனால்
இரு ஏவுகணைகளும்
விண்வெளிக்குச் சென்றுவிட்டதோ!
நீ காலம் என்னும்
கரையில் நிறுத்தப்பட்டிருக்கும்
கலங்கரை விளக்கம்!
காலத்தை வென்றவன் நீ!
சாகாவரம் பெற்றவன் நீ!
காவியமானவன் நீ!
உனக்குப் பாமாலை சூட்டும்பொழுது
என் மனம் பாகாய் உருகிடுதே!
அன்றும் , இன்றும் , என்றும்
உன் கைப்பிடித்து நடக்கும்
சாய்ராம் கல்விக்குழுமங்கள்....

~ சாந்தி , M.A., B.Ed.,
சாய்ராம் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி ,
திருவாரூர்.